# தமிழர் விடுதலைக் கூட்டணி

# දවිඩ එක්සත් විමුක්ති පෙරමුණ

# TAMIL UNITED LIBERATION FRONT

Telephone: (9411) 2347721
Fax: (9411) 2384904

30/1B, Alwis Place,
Colombo-03. Sri Lanka.


மேன்மை தங்கிய மகிந்த ராஜபக்ஷ, 27-12-2006
ஜனாதிபதி
அலரி மாளிகை,

அன்புடையீர்,

## இனப்பிரச்சினைத்தீர்வுக்கு வடகிழக்கு இணைப்பு அவசியம்

இணைக்கப்பட்ட வட கிழக்கு மாகாணத்தை பிரிப்பதற்கு தாங்கள் எடுக்கும் நடவடிக்கைக்கு எனது ஆட்சேபனை தெரிவிப்பதற்கு பொறுத்துக் கொள்ளுமாறு தங்களை கேட்டுக் கொள்கிறேன். இம் முயற்சி பற்றி வடகிழக்கு ஆளுநர் அறிக்கை மூலம் தெரிந்து கொண்டேன். வடக்கு கிழக்கு மாகாண இணைப்பு நியாயமானதா, நியாயமற்றதா என்பது பற்றி நான் விவாதிக்க வரவில்லை. நான் வற்புறுத்தி கூறுவது அந்த நடவடிக்கைக்கு இது பொருத்தமான நேரம் அல்ல என்பதும் பிரதம அமைச்சர் அவர்கள் பாராளுமன்றத்தில் வழங்கிய உறுதி மொழிக்கு அமைய சம்பந்தப்பட்ட மக்களிடமே இப் பணியை விட்டுவிட வேண்டும் என்பதே. இந் நிகழ்ச்சியை முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர் ஜெயவர்த்தனா அவர்கள் அரசியல் சாசனத்தின் ஆறாவது திருத்தத்துக்கு மேற்கொண்ட நடவடிக்கைக்கு ஒத்ததாகும். அவ்வேளை மிகப் பெரிய வகுப்பு கலவரம் ஏற்பட்டதும் தமிழர் விடுதலைக் கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர்கள் சபையில் பிரசன்னமாக இல்லாத நேரமும் ஆகும். அன்று அந்த நிலைமையை தவிர்த்திருந்தால் இன்றைய நிலை முற்றுமுழுதாக மாறுபட்டு இருந்திருக்கும். அவருடைய செயல் மிதவாதிகளிடமிருந்த தமிழ் தலைமையை எடுத்து பல்வேறு தமிழ் ஆயுத குழுக்களிடம் ஒப்படைத்தவேளை அத்தனை குழுக்களும் அழிக்கப்பட்டு அல்லது ஆயுத பலத்தினால் தனியொரு குழு உருவாகியது. இன்று தாங்கள் எடுக்கும் நடவடிக்கை அத்தகையவொரு நிலைமை உருவாக வழிவகுக்கும். இதுதான் இன்றைய நாட்டின் அவசர தேவையல்ல - குறிப்பாக யுத்தத்தால் சீரழிந்திருக்கும் பகுதிக்கு. சரியோ பிழையோ தமிழ் மக்களும் ஓரளவுக்கு இஸ்லாமிய மக்களும் தமது எதிர்காலம் ஒன்றுபட்ட வடகிழக்கு மாகாண இணைப்பிலேயே தங்கியுள்ளது எனக் கருதுகிறார்கள். இக்கட்டத்தில் இணைப்பை பிரிப்பது கிழக்கு மாகாண தமிழ், இஸ்லாமிய மக்கள் விரக்தியடைந்து வேறு வழியின்றி விடுதலைப் புலிகளின் கொடூர செயல்களை மறந்து அவர்களுக்கு பின் செல்ல வழி வகுக்கும். இந்த விடயத்தில் மக்களையே தீர்மானிப்பதற்கு தாங்கள் அனுமதிக்க வேண்டும். பிரச்சினைகளை சில தமிழ், முஸ்லீம் தலைவர்களோடும் கலந்து ஆலோசிக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்

இனப்பிரச்சினை தீர்வுக்கு இந்த இணைப்பு அவசியம் எனக் கருதப்பட்டதாலேயே 17 ஆண்டுகளுக்கு முன்பு இவ்விரு மாகாணங்களும் இணைக்கபட்டன. அன்றைய இந்திய பிரதமர் கௌரவ ராஜீவ்காந்தி அவர்களே இந்த இணைப்பை முன்னின்று நடத்தியவர். இந்த 17 ஆண்டுகளும் வடகிழக்கு மாகாண நிர்வாகம் மிக சுமூகமாக நடந்து வந்தது. நிர்வாகத்தை அரசியல் கட்சிகளோ, அரசியல்வாதிகளோ இன்றி அரச ஊழியர்களே நடத்தி வந்தனர். இந்த 17 ஆண்டுகளும் அடிப்படை மீறல் வழக்கொன்றை தாக்கல் செய்யக்கூடிய எவரும் இருக்காமல் இல்லை. ஆனால் அதற்குரிய அவசியம் ஏற்படவில்லை. விடுதலைப் புலிகள் இம் மாகாணங்களில் சில பகுதிகளை தமது கட்டுப்பாட்டிற்குக் கீழ் கொண்டு வராமல் இருந்திருந்தால் அப்பகுதியில் வாழும் சகல சிங்கள, தமிழ், இஸ்லாமிய மக்கள் மிக மகிழ்ச்சியோடும், சமாதானமாகவும், அமைதியாகவும் வாழ்ந்திருப்பர்.

இப்போது சில கட்சிகள் அக் கோரிக்கையை முன்வைக்க நீதிமன்றமும் சாதகமான தீர்ப்பை வழங்கியது. மாகாணங்களை பிரிக்க வேண்டிய நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியமில்லை.

அதற்குப் பதிலாக விடப்பட்ட தவறுகளை பாராளுமன்றம் மூலம் நிவர்த்தி செய்ய முடியும். இந்த நாட்டை பல தடவைகள் ஆண்ட தேசிய கட்சிகளில் ஒன்றான ஐக்கிய தேசிய கட்சி இதற்கு முழு ஆதரவு தருவதாக உறுதியளித்துள்ளது.

இணைக்கப்பட்ட மாகாண சபைகள் எதுவித தடங்கலும், சவால்களுமின்றி 17 ஆண்டுகள் தொடர்ந்து இயங்கியமையால் அது சட்டவலு பெற்றுள்ளது. இந்த மாகாணங்களில் பிறந்தவர்களும், வளர்ந்தவர்களும் யாரும் தலையிட முடியாத அடிப்படை உரிமைகளை பெற்றுள்ளனர். இப்பகுதியில் வாழ்கின்ற மக்கள் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட நிலையில் தம் பிள்ளைகளையும் தூக்கிக்கொண்டு முறையான உணவோ, குடிநீரோ இன்றி தம் உயிரை காப்பாற்ற காட்டுப் பாதைகளால் மழையையும் பொருட்படுத்தாது ஓடுகின்றனர்.

அவர்களுக்கு இப்பிரிவினையை ஆதரிப்பதற்கோ, எதிர்ப்பதற்கோ ஒரு சந்தர்ப்பம் அளிக்காது ஒருதலைப்பட்சமாக முடிவெடுப்பது நியாயமற்ற செயலாகும். பல்லாயிரக்கணக்கானவர்கள் தமது பல்வேறு சொத்துக்களை விட்டுவிட்டு கையில் அகப்பட்டதோடு வீட்டைவிட்டு ஓடுகின்றனர். இவர்கள் மீளவரும் போது எஞ்சிய சொத்துக்கள் இருக்குமோ என்பது சந்தேகம். பாதிக்கப்பட்டவர்கள் எல்லா மக்களுமே. இரு பக்கத்தாலும் ஏவப்படுகின்ற ஏவுகணைகளின் தாக்குதலுக்கு பயந்து செய்வதறியாது சிலர் பாதுகாப்பிடம் தேடி வள்ளங்களில் செல்லும் போது வள்ளம் கவிழ்ந்து கடலுக்குள் மாண்டுள்ளனர். பலர் கொல்லப்பட்டும் மிகப் பெருந்தொகையானோர் காயப்பட்டும் உள்ளனர். ஒழுங்கான உணவின்றி, பாதுகாப்பான உறைவிடமின்றி அகதிகள் முகாம்களில் வாழ்கின்றவர்களை பார்க்க பரிதாபகரமாகவும், கதைகள் சோகம் நிறைந்ததாகவும் உள்ளன.

தாங்கள் பிடிக்கும் கடிவாளத்தை சரிவர பிடிப்பீர்களேயானால் நீங்கள் சகல பிரச்சினைகளுக்கும் தீர்வு காணுவீர்கள் என்பதே பொதுமக்களின் அபிப்பிராயமாகும். பிரபாகரனின் பிள்ளைகள் மற்றும் விடுதலைப்புலிகளின் தலைவர்களின் பிள்ளைகள் மிகப் பாதுகாப்பான இடங்களில் வாழ்கின்றனர். யுத்தப் பிரதேசங்களில் வாழும் ஏழைப் பெற்றோரும், பிள்ளைகளும் துன்பப்படுகின்றார்கள். மாகாணங்களின் பிரிவினையை கேட்பவர்களுக்கு இணைக்கப்பட்ட பகுதிகளில் பெரிதாக அக்கறையில்லை. பல்வேறு கோரிக்கைகள் கிளப்பப்படுவது சிறுபான்மை மக்களை வேதனைப்படுத்தவே. தாங்கள் இந்த நாட்டின் தலைவர் என்ற முறையில் சிறுபான்மை இனததவரின் நலனை பாதுகாக்க கடமைப்பட்டுள்ளீர்கள். வசதியான தமிழ் மக்கள் நாட்டைவிட்டு வெளியேறி பிற நாடுகளில் வசதியாக வாழ்கின்றார்கள். வசதியற்றவர்கள் விடுதலைப் புலிகளுக்கு பயந்து அகப்பட்ட பொருட்களுடன் வீட்டைவிட்டு வெளியேறி சிங்கள மக்கள் மத்தியில் பாதுகாப்பாக இருப்பதாக உணர்கின்றார்கள். வசதியுள்ள சில தமிழர்கள் பாதுகாப்பாக வாழவும், பிள்ளைகளுக்கு கல்வியூட்டவும், இந்தியா சென்றுள்ளனர். சிங்கள மக்களில் நம்பிக்கை வைத்துள்ள தமிழர்கள் சிங்கள மக்களுடன் அமைதியாக வாழ்வதை நீங்கள் காண்கிறீர்கள். அதுபோல் சிங்கள மக்களும் தமிழ் மக்கள் மீது நம்பிக்கை வைத்து தமிழர்களுடன் ஏன் வாழ சம்மதிக்கக்கூடாது? எமது மக்கள் அனைவரும் இன, மத பேதமின்றி, சகல உரிமைகளுடன் வாழ வேண்டுமென தாங்கள் விரும்பினால் வடகிழக்கு இணைப்பை பிரிப்பதை தொடரவிடாது உடன் நிறுத்தி தற்போதுள்ள நிலைமையை தொடர விட வேண்டும். நாட்டில் அமைதி திரும்பி, சகல மக்களும் தத்தமது வீடுகளுக்கு திரும்பும் வரை பிரிவினை சம்பந்தமான பொதுஜன வாக்கெடுப்பு நடவடிக்கை நிறுத்தப்பட வேண்டும். அதுவரை நாட்டின் பாராளுமன்ற சட்டசபை மூலம் நீதிமன்ற தீர்ப்புக்கு அமைய சில நடவடிக்கைகள் எடுக்கலாம்.

இனப்பிரச்சினை தீர்வுக்கு அரசு ஒஸ்லோ, டோக்கியோ ஒப்பந்தங்களின் அடிப்படையில் தீர்வு காண்பதற்கு கட்டுப்பட்டுள்ளது என்பதை வலியுறுத்தி கூறுவதோடு வேறு ஏதாவது மாற்றுத்திட்டத்தை தமிழ் மக்கள் மீது திணிப்பதை நியாயமற்றதாக கருதுகிறேன். உலகின் பல நாடுகளிலும் வாழும் தமிழர்கள் தம் நாட்டுக்கு திரும்ப வந்து ஒன்றுபட்ட இலங்கைக்குள் தமிழ், சிங்கள, முஸ்லீம் மற்றும் ஏனைய சிறுபான்மை மக்களோடு சந்தோஷமாக வாழ்வதையே விரும்புகின்றனர். 50 ஆண்டுகளாக அமுலில் இருந்த ஒற்றையாட்சி முறையின் கீழ் இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண தவறிய பட்சத்தில் எமக்குள்ள எஞ்சியுள்ள ஒரேயொர வழி ஐக்கிய இலங்கைக்குள் சமஷ்டி முறையை அமுல்ப்படுத்துவதே.

சர்வதேச சமூகமும் உள்ளூர் தமிழர்களும் அதையே விரும்புகின்றனர். சர்வதேச சமூகம் நாட்டுப்பிரிவினையை முற்று முழுதாக ஏற்றுக்கொள்ளாது என்பதை விடுதலைப் புலிகள் அறிவர். எனவே சமஷ்டி தீர்வை அவர்களும் ஏற்றுக்கொள்ள சம்மதிக்க வைக்க வேண்டும்.

நன்றி

வீ.  ஆனந்தசங்கரி
தலைவர்  -  த.வி.கூ